தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் - TARATDAC
TAMILNADU ASSOCIATION FOR THE RIGHTS OF ALL TYPES OF DIFFERENTLY ABLED AND CAREGIVERS - TARATDAC
(Affiliated to National Platform for the Rights of the Disabled - NPRD)
TARATDAC Regd. No. 292/2010
State Office : No. 1, 1st Street, Chinnaiya Garden, East Jones Road, Saidapet, Chennai - 600 015
Phone : 044-42119826, Email : taratdac@gmail.com

Patrons : Padma Bushan N.Ram   Shri. M.Dawood Miakhan   Justice K.Chandru (Rtd.)

Shri. T.Wilson, State President, 94439 09090
Smt. B.Jansirani, State General Secretary, 94444 05645
Shri. K.R.Chakaravarthy, State Treasurer, 94422 61818

***New Address: #2/38 Potters street, East Jones Road, Saidapet, Chennai 600 015.***

**To** **09.05.2024**

**தலைமை செயலாளர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு, சென்னை-600 009.**

தலைமை செயலாளர் அவர்களுக்கு... வணக்கம்.

பொருள்: **மாற்றுத்திறன் மாணாக்கர் - கல்லூரி கட்டணங்களில் விலக்களித்து அரசாணைகள்–15ஆண்டுகளுக்கு மேலாகியும் பெரும்பாலான கல்லூரிகளில் அமலாகாத அவலம் - தலைமை செயலாளர் தலையிடக் கோரிக்கை**

பல்கலைக்கழகங்கள், திறந்தநிலை பல்கலைக்கழகங்கள், சட்டம், மருத்துவம், பொறியியல், மீன்வளம், கால்நடை, பாலிடெக்னிக், சிறப்பு பயிலகங்கள் உள்ளிட்ட அரசு & அரசு உதவிபெறும் உயர்கல்வி நிலையங்களில் பயிலும் மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கு கல்விக்கட்டணம்(Tuition Fees) செலுத்துவதில் இருந்து விலக்களித்து 2008 ஆம் ஆண்டு அரசாணை(எண்.135) உள்ளது. இது தவிர ஆய்வுக்கூட கட்டணம், தேர்வுக் கட்டணம் உள்ளிட்ட சிறப்பு கட்டணங்களில் இருந்து விலக்களித்து 2010 அரசாணை(எண்.30) உள்ளது.

**பெரும்பாலும் அமலாகாத நிலை**

இந்த அரசாணைகளின் பயன்களை மாற்றுத்திறன் மாணாக்கர்கள் பெற்றிட உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி 2010ல் அப்போதைய மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர், அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடிதம் எழுதினார். எனினும், இந்த அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் மிகப் பெரும்பாலான உயர்கல்வி நிலையங்களில் இந்த அரசாணைகள் அடிப்படையில் கட்டணங்கள் விலக்களிக்கப்படாத அவலம் நீடிக்கிறது.

**தலைமை செயலாளர் தலையிடுக**

நடப்பாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடவடிக்கைகள் கல்லூரிகளில் துவங்கப்பட்டுள்ள நிலையில், இந்த அரசாணைகளை முழுமையாக நடைமுறைக்கு கொணடுவர வேண்டும். உயர்கல்வித்துறை, சட்டத்துறை, மருத்துவத்துறை, மீன்வளத்துறை உள்ளிட்ட பல துறைகள் சம்பந்தப்படுவதால், சம்பந்தப்பட்டத்துறை செயலாளர்கள் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி செயல்படுத்த சீரிய நடவடிக்கைகளை தலைமைச் செயலாளர் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என எமது சங்கம் கேட்டுக்கொள்கிறது.

**குறைதீர் அதிகாரி**

மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டப் பிரிவு-23ன்படி கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து உயர் கல்வி நிலையங்களிலும் மாற்றுத்திறனாளிகள் குறைகளைத் தீர்க்கும் வகையில் குறைதீர் அதிகாரிகளையும் நியமித்திட தலைமை செயலாளர் உத்தரவாதப்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம்(TARATDAC) வலியுறுத்திக் கோருகிறது.

**(தோ.வில்சன்)**
**தலைவர் - 9443909090**

**(பா.ஜான்சிராணி)**
**பொதுச் செயலாளர்-9444405645**

**Copy To: Diff Abled, Higher Education, Law, Health, Livestock-Fisherish Dept Secretaries, Ch-9.**